வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 17.10.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 290 பக்கங்கள் : 08

# இலங்கைக்கு இந்தியாவின் ஆதரவு வலுப்படுத்தப்படும்!

## பிரதமர் ஹரிணியை சந்தித்த பின்னர் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்

புதுடில்லி, ஒக்ரோபர் 17

**இலங்கைக்கு இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் கல்வி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் நமது ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் விவாதிக்கப்பட்டது என இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று வியாழக்கிழமை காலை டில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்தார்.

இந்தச் சந்திப்புக் குறித்து தனது சமூக ஊடகப் பக்கத்தில் பதிவிட்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், "இன்று (நேற்று) காலை இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூரியவை டில்லியில் சந்தித்ததில் மகிழ்ச்சி. இலங்கைக்கு இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் கல்வி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் நமது ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஹரிணி அமரசூரிய 07



# கச்சதீவை மீட்பது குறித்து ஹரிணியுடன் பேசுங்கள்!

### மோடிக்கு ஸ்டாலின் அவசர கடிதம்

சென்னை, ஒக். 17

இலங்கையிடமிருந்து கச்சதீவை உடனடியாக மீட்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூரிய 3 நாள் பயணமாக புதுடில்லி சென்ற நிலையில் இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீட்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் முதல்வர் ஸ்டாலின் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்

அது மட்டுமின்றி இலங்கை கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்களையும் 07

# ஊர்காவற்றுறை விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணத்தில் சொகுசு பஸ் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அல்லைப்பிட்டியை சேர்ந்த கண்ணதாசன் பிரேமதாஸ் எனும் மீன் வியாபாரியே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை வீதியில், மோட்டார் சைக்கிளில் பயணித்த மீன் வியாபாரியை சுற்றுலா பயணிகளை ஏற்றி சென்ற சொகுசு பஸ் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே 07

# இருள் சூழ்ந்த வேளை இலங்கைக்கு உதவிய உண்மை நண்பன் இந்தியா!

### பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராட்டு

புதுடில்லி, ஒக். 17

இருள் சூழ்ந்த நேரத்தில் உண்மையான நண்பனை போல இலங்கைக்கு இந்தியா கைகொடுத்து உதவியதாக, பிரதமர் ஹரிணி அமரசூரிய கருத்துரைத்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியின் போது, இந்தியா அளித்த நிதியுதவி தொடர்பில் கருத்துரைத்த போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ஹரிணி, டில்லியுள்ள இந்துக்கல்லூரி பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வில் 07

# செவ்வந்தியை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை நடத்த பொலிஸ் நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 17

இஷாரா செவ்வந்தி உட்பட நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட ஆறு பேரிடம் மேலும் விசாரணைகளை நடத்துவதற்கு தடுப்புக்காவல் உத்தரவுகள் பெறப்பட உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் கைது செய்யப்பட்ட, 'கணேமுல்ல சஞ்சீவ' கொலை வழக்கின் முக்கிய சந்தேக நபரான இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட சந்தேக நபர்கள் அறுவர் நேற்று முன் தினம் மாலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதில் இஷாரா செவ்வந்தி, உள்ளிட்ட நால்வர் கொழும்பு குற்ற விசாரணைப்பிரிவிலும் மற்றைய இரு சந்தேகநபர்களும் குற்றப் புலனாய்வு பிரிவின் பேலியகொடை பிரிவிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். 07

# போர்க்குற்றச்சாட்டு குறித்து உரிய விசாரணை வேண்டும்!

### சரத் பொன்சேகா வலியுறுத்து

கொழும்பு, ஒக். 17

இறுதிப்போரின்போது ஏதேனும் குற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்பதற்குரிய சாட்சி இருந்தால் நிச்சயம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று இலங்கையில் இறுதிக்கட்டப் போரை வழிநடத்திய இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசாரணைக்கு சர்வதேச 07

# சர்வதேச குற்றவியல் விசாரணையை வலியுறுத்த வேண்டும் பொன்சேகா!

கொழும்பு, ஒக். 17

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இறுதி யுத்தத்தில் நடந்த விடயங்கள் தொடர்பில் உண்மையாகவே சாட்சியம் வழங்குவார் என்றால் சர்வதேச குற்றவியல் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்த வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் 07

# சிறுவர் உரிமை மீறல்கள் தொடர்ந்தும் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 17

நாட்டில் சிறுவர் உரிமை மீறல்கள், குறிப்பாக உடல் ரீதியான தண்டனைகள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உடல் ரீதியான தண்டனைகள் நிரந்தரமான உணர்ச்சி ரீதியான காயங்களை ஏற்படுத்துவதுடன், சில சமயங்களில் கடுமையான மன 07

# கடன்மறுசீரமைப்பை அடுத்து இலங்கையின் பொருளாதார செயலாக்கத்தில் முன்னேற்றம்!

### சர்வதேச நாணய நிதியம் பாராட்டு

கொழும்பு, ஒக். 17

விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டத்தின் பிரகாரம் முன்னெடுக்கப்பட்ட கடன்மறுசீரமைப்பு செயன்முறையை அடுத்து இலங்கையின் பொருளாதார செயலாக்கம் முன்னேற்றமடைந்திருப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் நாணய 07




# தமிழக சட்டசபை தேர்தலுக்கு முன்னர் இலங்கையில் மாகாணசபைத் தேர்தல்!

### பொதுஜன பெரமுன கூறுகிறது

கொழும்பு, ஒக். 17

இந்தியாவில் தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு முன்னதாக இலங்கையில் மாகாணசபைத் தேர்தல் நடைபெறுவதற்குரிய சாத்தியம் உள்ளதாக பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன கூறியவை வருமாறு -

அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலுக்கு செல்ல 07

# குருந்தூர்மலையில் பூர்வீக நிலங்களையும் அபகரிக்கும் தொல்பொருள் திணைக்களம்!

## கரைதுறைப்பற்று தவிசாளர் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஒக். 17

தமிழ் மக்கள் பூர்வீகமாக வயல் செய்து வந்த நிலங்களை தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது என கரைதுறைபற்று பிரதேச சபை தவிசாளர் சின்னராசா லோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் பூர்வீக இடமாக காணப்படுகின்ற குமுழமுனை, தண்ணி முறிப்பு, குருந்தூர்மலைப் பகுதியில் இருந்த ஆதி சிவன் ஐயனார் ஆலயம் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு விகாரை அமைக்கப்பட்டதன் பின்னணியில் அதனை சூழ உள்ள வயல் நிலங்களையும் தொல்பொருள் திணைக்களம் அபகரிப்பு செய்து வருகிறது.

குறிப்பாக நீதிமன்ற தடை உத்தரவுகளை மீறியும் குருந்தூர் மலைப்பகுதியில் விகாரை அமைக்கும் பணிகள் முற்று முழுதாக நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன.

இதன் தொடர்ச்சியாக பல்வேறு தடைகளை மீறியும் தமிழ் மக்களின் பூர்வீக வயல் நிலங்களையும் ஆக்கிரமிப்பு செய்கின்ற தொல்பொருள் திணைக்களத்தின் செயல்பாடுகள் தொடர்ந்து வருகின்றன - என்றார்.

தமிழ் மக்களின் பூர்வீக வயல் நிலங்களில் தொல்பொருள் திணைக்களத்தினால் புதிதாக பெயர்ப்பலகை ஒன்று நாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த இடத்திற்கு கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் சின்னராசா லோகேஸ்வரர் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் கலைச்செல்வன் ஆகியோர் சென்று குருந்தூர் மலை பகுதி மற்றும் மக்களின் வயல் நிலங்களில் புதிதாக பெயர்ப்பலகை நடப்பட்ட இடங்களை பார்வையிட்டனர்.

குறித்த பகுதியில் வனவள திணைக்களம் தொல்லியல் திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள், பூர்வீகமாக வாழ்ந்து வந்த மக்களை அங்கு மீள்குடியேறவிடாத அளவில் தடுத்து வருவதாகவும் குறித்த இடத்தில் வசித்து வந்த மக்களை உடனடியாக அந்த இடத்தில் மீள்குடியேற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (அ)



# செம்பியன்பற்றில் கடை தீப்பற்றி பெறுமதியான பொருள்கள் நாசம்!

யாழ்ப்பாணம், ஒக். 17

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு பகுதியில் நேற்றிரவு பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீப்பரவலில் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

கடையின் உட்பகுதியில் தீ விபத்து ஏற்பட்டதால் தளபாடங்கள் மற்றும் பல பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடை உரிமையாளர் நேற்று முன்தினம் விற்பனை நிலையத்தை பூட்டிவிட்டு சென்று, மீண்டும் நேற்றுக் காலை வியாபார நடவடிக்கைகளுக்காக விற்பனை நிலையத்தை திறந்த போது கடையின் உட்பகுதி முழுவதும் எரிந்து உள்ளதை அவதானித்து உள்ளார்.

சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸாரிடம் முறையிட்டதையடுத்து, மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# முரசுமோட்டையில் டிப்பர் - டிராக்டர் நேருக்கு நேர் மோதி 3 பேர் காயம்!



கிளிநொச்சி, ஒக். 17

பரந்தன் - முல்லைத்தீவு, ஏ-35 வீதி முரசுமோட்டை பகுதியில் டிப்பர் மற்றும் உழவு இயந்திரம் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு பரந்தன் பகுதியிலிருந்து முரசுமோட்டை நோக்கி, சீமெந்து கற்களை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரமும், எதிர்த்திசையில் வந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றது.

உழவு இயந்திரத்துடன் மோதிய டிப்பர், வீதியில் குறுக்காகத் தடம் புரண்டதில் டிப்பரின் சாரதி சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளதாக தெரியவருகின்றது.

மேலும், உழவு இயந்திரத்தில் ஒரு பெண் உட்பட மூன்று பேர் பயணித்திருந்த நிலையில், மூவரும் காயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சண்டிலிப்பாயில் 2 ஆயிரம் பனம் விதைகள் நாட்டப்பட்டன!

யாழ்ப்பாணம், 17

சண்டிலிப்பாயில் நீர் வளம் மற்றும் குளக்கட்டின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் 2 ஆயிரம் பனம் விதைகள் நேற்று காலை நாட்டப்பட்டன.

இந்த நிகழ்வு நவாலி தெற்கு முருகானந்தா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், சண்டிலிப்பாய் பிரதேச சபை மற்றும் உடுவில் பிரதேச செயலகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர், பிரதேச சபையின் உறுப்பினர்கள், பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்கள், கிராமசேவகர் மற்றும்

சனசமூக நிலைய உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு பனம் விதைகளை நாட்டினர். (அ)

# வெள்ளைப்பிரம்பு தினத்தையொட்டி யாழில் நேற்று விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 17

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு, நல்லூர் பிரதேச செயலக மாற்றுவலுவுடைய சுய உதவிக்குழுவின் ஏற்பாட்டில் யாழில் நேற்று விழிப்புணர்வு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நேற்று காலை நல்லூர் ஆலயம் முன்பாக குறித்த விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது. வெள்ளைப் பிரம்பே எங்கள் விழி நரம்பு என்ற தொனிப்பொருளில், நல்லூர் பிரதேச செயலகம் வரை குறித்த விழிப்புணர்வு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இந்த பேரணியில் கலந்து கொண்ட விழிப்புலனற்றவர்கள் “விழியின் இழப்பு வாழ்வின் இழப்பல்ல எங்கள் உரிமைக்காக குரல் கொடுப்போம்“ போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். (அ)

# முல்லைத்தீவு மேலதிக அரச அதிபராக சதீசன் மஞ்சுளாதேவி கடமையேற்பு



முல்லைத்தீவு, ஒக். 17

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் புதிய மேலதிக மாவட்ட அரசாங்க அதிபராக (நிர்வாகம்) நேற்று முன் தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார் திருமதி சதீசன் மஞ்சுளா தேவி.

நேற்றுவரை கரைதுறைப்பற்று பிரதேச செயலாளராக தனது பணியை ஆற்றிய இவர் முல்லைத்தீவு மாவட்டத்தின் முதலாவது பெண் மேலதிக அரசாங்க அதிபராக தனது கடமையை ஆரம்பித்துள்ளார். (அ)

# மக்களின் துன்பத்தை போக்க தியானப்பயிற்சிகள் அவசியம்

## வடக்கு மாகாண ஆளுநர் கருத்து

யாழ்ப்பாணம், ஒக். 17

இன்றைய நாட்டுச் சூழல் அமைப்பில் வாழும் மக்களுக்கு எல்லா வசதிகளும் கிடைக்கப் பெற்றிருந்தாலும், அவர்களைச் சூழ்ந்திருக்கும் துன்பத்தை போக்குவதற்கும் அதிலிருந்து விடுதலை பெறுவதற்கும் தியானப்பயிற்சிகள் மற்றும் மனவளக்கலை யோகாப் பயிற்சிகள் தேவையாக இருக் கின்றன என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அறிவுத் திருக்கோயிலின் ஒன்பதாம் அகவை நாளை முன்னிட்டு அங்கு நேற்று முன் தினம் புதன் கிழமை நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

ஆளுநர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுவாக ஒவ்வொரு மனிதனும் விரும்புவது ஆரோக்கியத்தையும், அமைதியையும் சந்தோசத்தையும்தான். ஆரோக்கியம் என்பதை நிச்சயம் உருவாக்கிக் கொள்ள முடியும். தியானம் என்ற தன்மை எமக்குள் வந்துவிட்டால் அமைதியும் சந்தோசமும் இயல்பானதாகிவிடும்.

தியானம் என்பது செயல் அல்ல. அது ஒரு நிலை வாழ்க்கையே. தியான நிலையில் இருக்க வேண்டும் என்பது தான் நம் நோக்கம். எதைச் செய்தாலும் தியான நிலையில் செய்வதைப் பற்றியே பேசுகின்றோம். இத் தன்மையையே ஒவ்வொருவரும் வாழ்வில் கொண்டுவர விரும்புகின்றோம். அப்படி நடந்தால், ஆரோக்கியமாக இருப்பது, அமைதியாக ஆனந்தமாய் இருப்பது என்பதெல்லாம் முயற்சியின்றி நடக்கும்.

ஒருவனின் மனம் தூய்மையாக இல்லையெனில் பணமோ, பலமோ அவனுக்கு பலன் தராது என அறிஞர் அரிஸ்டாட்டில் கூறியுள்ளதனை இவ்வேளை உங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

தியானத்தை பொறுத்தவரை மனச் சுத்தமே முதன்மையானது அமைதியான மனம், நல்ல கவனிப்புத்திறன், கருத்துக்களில் தெளிவு, தகவல் தொடர்புகளில் மேம்பாடு, திறன்கள் மற்றும் திறமைகள் மலர்தல், அசைக்கமுடியாத உள்மனத் திடம், ஆற்றுப்படுத்தல், உள்மன ஆற்றுதலுடன் இணைதல், இளைப்பாறுதல், புத்துணர்வு பெறுதல் என்பவை ஒழுங்கான சீரான தியானத்தின் இயற்கை விளைவுகளாகும்.

கண் பார்ப்பதைவிட மனம் அறிவதை விட வேகமாக அழுத்தம் ஏற்படும் இவ் உலகில் ஆனந்தம் மற்றும் அமைதியைப் பெற தியானத்தின் சக்தியைத் தட்டிப்பெற வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினராக கலைமாமணி சொல்வேந்தர் சுகி.சிவம் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் தெய்வீக இசை அரங்கம்

வடமராட்சி, ஒக். 17

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் அவர்கள் தலைமையில் தெய்வீக இசை அரங்கம் இன்று இடம்பெறவுள்ளது.

இசைக்கலைமணி நடேசு செல்வச்சந்திரன் உள்ளிட்ட கலைஞர்கள் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு தெய்வீக இசை அரங்கை நிகழ்த்தவுள்ளனர். (அ-02)

ஈழநாடு
Eelanadu
17.10.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 31

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஹரிணியின் இந்திய விஜயம்

பிரதமர் ஹரிணி அமரசூரிய மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக புதுடில்லி சென்றிருக்கின்றார். இது அவருடைய முதலாவது இந்திய விஜயமாகும். சீன ஜனாதிபதியால் அழைக்கப்பட்டிருந்த அவர், அங்கிருந்து திரும்பிய மறுதினமே புதுடில்லிக்கு சென்றிருக்கின்றார். இந்த விஜயத்தின் போது, பிரதமர் மோடி, வெளிவிவார அமைச்சர் அடங்கிய பலரை அவர் சந்திக்கவுள்ளார்.

இதுவரையில் அநுரகுமார திசாநாயக்க மட்டுமே உலகத் தலைவர்களை சந்தித்து வந்த நிலையில் பிரதமர் ஹரிணியும் தேசிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவராக நோக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றதா அல்லது ஜே.வி.பியின் தலைவர் என்னும் வகையில் அநுரகுமாரவும் அவரது குழுவினரும் வெளிவிவகார முகமாக தங்களை அடையாளப்படுத்துவதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனரா?

ஹரிணி அடிப்படையில் ஜே.வி.பி. அல்லர் - அவர் என்றுமே, தன்னை ஜே.வி.பியாக அடையாளப்படுத்தப்போகும் ஒருவருமல்ல. தேசிய மக்கள் சக்தியே அவருடைய அடையாளம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தாராளவாத முகமாகவும் முற்போக்கு முகமாகவும் அவரே இருக்கின்றார். இன்றைய நிலையில் ஹரிணி இல்லையென்றால் தேசிய மக்கள் சக்தியின் தாராளவாத முகம் இல்லாமல் போய்விடும் என்னும் நிலையில் அவருடைய முக்கியத்துவம் இருக்கின்றது.

இந்த நிலையில் அண்மைக்காலமாக வெளிவிவகார விடயங்களிலும் ஹரிணி நோக்கப்படுகின்றார். ஜே.வி.பியின் கடந்த கால இந்திய எதிர்ப்பு மற்றும் மேற்குலக எதிர்ப்பு இப்போதும் அவர்களை தயக்கத்துடன் நோக்கும் அல்லது சந்தேகத்துடன் நோக்கும் நிலைக்கு காரணமாக இருக்கின்றது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அண்மைய அறிக்கை இதற்கு ஆதாரமாக இருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் வெளிவிவகார விடயங்களை கையாள்வதற்கு ஹரிணி போன்றவர்கள் மிகவும் பொருத்தமானவர்களாக இருப்பதில் ஆச்சரியம் இல்லை. ஆனால், பாரம்பரிய ஜே.வி.பியினர் இதனை எவ்வாறு நோக்குவர் என்பதும் சிக்கலானது. ஜே.வி.பி. போன்ற ஆயுத இயக்க பின்புலத்தில் இருந்து வந்தவர்களால் எந்தளவு தூரம் வெளியிலிருந்து உள்வாங்கப்பட்டவர்களுடன் பயணிக்க முடியும் என்பதில் கேள்விகள் எழலாம். அவ்வாறான கேள்விகள் எழுகின்ற போதுதான் தேசிய மக்கள் சக்தி உள்ளக நெருக்கடிகளை சந்திக்க நேரிடும்.

ஜே.வி.பியின் உயரடுக்கினர் மத்தியில் சிலர் நோக்கப்பட்டாலும் கூட அவர்கள் எவருமே வெளியுலகில் குறிப்பாக இந்திய அமெரிக்க மட்டத்தில் உளப்பூர்வமான நட்புடன் நோக்கப்படுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. முக்கியமாக மேற்குலம் ஜே.வி.பியின் தலைமையை தங்களுடைய இதயத்திற்கு நெருக்கமாக நோக்க வாய்பில்லை ஆனால், ஹரிணி போன்றவர்கள் அவர்களுடைய இதயத்திற்கு நெருக்கமானவர்களாக நோக்குவதில் எவ்வித சிக்கல்களும் இல்லை.

ஹரிணி இந்தியாவிலும் அமெரிக்காவிலும் படித்தவர். இரண்டு பக்க உயர்தரப்பினருடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய பின்னணி அவருக்குண்டு. ரணில் அளவிற்கு அவருக்கு அனுபவம் இல்லாவிட்டாலும் கூட ரணில் போன்ற முகத்தை அவரால் பிரதிநிதித்துவம் செய்ய முடியும். இவ்வாறானதொரு பின்புலத்தில் நோக்கினால் ஜே.பி.பியின் எதிர்கால அரசியல் நகர்வில் ஹரிணியின் முகம் தவிர்க்க முடியாதது. ஒரு வேளை ஜே.வி.பியின் ஒரு தரப்பு தவிர்க்க முற்பட்டால், ஹரிணியை விடவும் சிறந்த இன்னொரு தாராளவாத முகத்தை முன்னிறுத்த வேண்டும். ஆனால் ஜே.வி.பி. போன்ற அரசியல் கட்சியுடன் அவ்வளவு எளிதாக அவ்வறான பின்புலம் கொண்டவர்கள் இணைந்து கொள்ள விரும்பமாட்டார்கள்.

## 4 இலட்சம் ரூபாவை நெருங்கும் தங்க விலை



கொழும்பு, ஒக். 17

உலகளாவிய ரீதியில் தங்கத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் இலங்கையிலும் தங்கத்தின் விலை கணிசமாக அதிகரித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமையுடன் ஒப்பிடும்போது இலங்கையில் தங்கத்தின் விலை சுமார் 60,000 ரூபாவாக அதிகரித்துள்ளதாக உள்நாட்டு சந்தை தரவுகள் தெரிவிக்கின்றன.

அதன்படி, நேற்று வியாழக்கிழமை காலை கொழும்பு, புறக்கோட்டை தங்கச் சந்தையில் 22 கரட் தங்க பவுண் ஒன்றின் விலை நேற்று முன்தினம் விலையுடன் ஒப்பிடும் போது 10,000 ரூபாய் அதிகரித்துள்ளது. புதிய விலை தற்போது 360,800 ரூபாவாக உள்ளது.

கடந்த வியாழக்கிழமை, 22 கரட் தங்க பவுண் ஒன்றின் விலை 305,300 ரூபாவாக காணப்பட்டது.

இந்நிலையில், கொழும்பு புறக்கோட்டை தங்கச் சந்தையைச் சேர்ந்த வர்த்தகர்கள், கடந்த வியாழக்கிழமை 330,000 ரூபாவாக இருந்த 24 கரட் தங்க பவுண் ஒன்றின் விலை தற்போது 390,000 ரூபாவாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கின்றனர். (அ)

## அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் நிறைவேற்று பணிப்பாளர் நிலு விஜேதாஸ கைது!

கொழும்பு, ஒக். 17

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் நிலு விஜேதாஸ, இலஞ்ச ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் பழுதுபார்ப்புப் பணிகளைச் செய்வதற்கு அரசுக்குச் சொந்தமான பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களையும் சொத்துக்களையும் முறைகேடாகப் பயன்படுத்தியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் இத்தகைய பணிகளைச் செய்ததன் மூலம், அரசுக்கு ரூபா 1.6 மில்லியனுக்கும் அதிகமான நிதி இழப்பை ஏற்படுத்தியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ)

## கொழும்பில் இருந்து மும்பைக்கு விமானத்தில் கடத்தப்பட்ட கஞ்சா

மும்பை, ஒக். 17

கொழும்பிலிருந்து பயணம் செய்த தம்பதியினரிடமிருந்து சுமார் ரூ.5 கோடி (இந் திய மதிப்பில்) மதிப்புள்ள கஞ்சாவை மும்பை சுங்கத் துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

சத்ரபதி சிவாஜி மஹாராஜ் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இந்த தம்பதியினர் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் மும்பையைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விமான நிலைய சுங்கத் துறையின் வான் நுண்ணறிவுப் பிரிவுக்கு இந்தத் தம்பதியினர் தங்கள் பையில் தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு வருவதாகத் தகவல் கிடைத்தது.

அதிகாரிகள் அவர்களின் பைகளைச் சோதனையிட்ட போது, மூன்று மூடப்பட்ட பொதிகளில் சந்தேகத்திற்குரிய பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

கள ஆய்வு உபகரணங்களைப் பயன்படுத்திச் சோதிக்கப்பட்டதில், சுமார் 5 கிலோ கிராம் எடையுள்ள கஞ்சா கைப்பற்றப்பட்டது. (அ)

## பாவனையில் இருந்து நீக்கப்பட்ட மருந்துகள் 421 கோடி ரூபா பெறுமதி கொண்டவையாம்!

கொழும்பு, ஒக். 17

2024 ஆம் ஆண்டில் 421 கோடி ரூபாய் பெறுமதியான மருந்துகள் மற்றும் இரசாயனப் பொருட்கள் என்பன பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக புதிய கணக்காய்வு அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட நிலையில், அரச மருத்துவமனைகளில் பழுதடைந்த மருந்துகள் மற்றும் இரசாயனப் பொருட்களே பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 36 கோடி ரூபாய் பெறுமதியான மருந்துகளின் தரம் மாற்றமடைந்துள்ளதால் அவற்றையும் பயன்பாட்டிலிருந்து தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புதிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாயாருக்கு வீண் டென்ஷன் வந்துப் போகும். புது வேலை அமையும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள்.

**இடபம்**

குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சொத்துப் பிரச்சினைக்கு சுமுக தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். நல்லன நடக்கும்.

**மிதுனம்**

கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கடகம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**

விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். நிதானம் தேவைப்படும்.

**கன்னி**

தன்னம்பிக்கையுடன் பொதுகாரியங்களில் ஈடுபடுவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக்கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**துலாம்**

உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**விருச்சிகம்**

இதுவரை இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன விஷயங்கள் முடியும். மாற்றம் ஏற்படும் நாள்.

**தனுசு**

சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் சின்ன சின்ன பிரச்னைகள் வரக்கூடும்.

**மகரம்**

உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். பற்று வரவு கணிசமாக உயரும். சக ஊழியர்கள்உங்கள்வேலைகளைப்பகிர்ந்துக் கொள்வார்கள்.

**கும்பம்**

ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பழைய சிக்கல்கள் தீரும். வியாபாரத்தில் ராஜதந்திரத்தால் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள்.

**மீனம்**

குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. நீண்டநாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை மாற்றுவீர்கள். நன்மை நடக்கும்.

# 7 பவுண் நகை, 3 இலட்சம் ரூபாய் திருடிய இளைஞன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 17

சுன்னாகம் பகுதியில் 7 பவுண் நகை மற்றும் 3 இலட்சம் ரூபாய் பணம் என்பவற்றை திருடிய இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நகை மற்றும் பணம் திருடப்பட்டதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், விசாரணைகளை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸார் வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞன் ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

குறித்த நபர் திருடுவதற்கு தயாராகும் ஊரில் வாடகைக்கு ஒரு வீட்டினை எடுத்து தங்கி நின்று, முழுமையாக நோட்டமிட்ட பின்னர் அந்த வீட்டை விட்டு வெளியேறி சில நாட்களின் பின்னர் திருட்டில் ஈடுபட்டு வந்த விடயம் அம்பலமாகியுள்ளது. இது அவரது வழமையான செயல்பாடு என தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# வவுனியா மாவட்டத்தில் 64 வீதமான மழை வீழ்ச்சி

வவுனியா, ஒக். 17

வவுனியா மாவட்டத்தில் 2025 ஜனவரி தொடக்கம் ஒக்ராபர் 15ஆம் திகதி வரை 64 வீதமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வளிமண்டல நிலைய பொறுப்பதிகாரி தா. சதானந்தன் தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரை ஆண்டுக்கு சராசரியாக 1200 தொடக்கம் 1300 மில்லி மீற்றர் அளவிலேயே மழை வீழ்ச்சி கிடைக்கப்பெறுகின்றது. அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் ஜனவரி முதல் ஒக்ரோபர் 15ஆம் திகதி வரையயான காலப்பகுதியில் 834. 3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இந்த நிலையில், வருகின்ற 77 நாட்களுக்குள் 465.7 மில்லி மீற்றர் அளவிலான மழைவீழ்ச்சியே பதிவாகும்.

இனிவரும் காலப்பகுதியில் பெய்யும் மழை சாதாரண மழையாகவே காணப்படும். நவம்பர் இறுதி, டிசெம்பர் மாதங்களில் மழை அதிகமாக காணப்பட்டாலும் சராசரி மழைவீழ்ச்சியாகவே காணப்படும்.

மேலும், இக்காலப்பகுதியில் தாழமுக்க நிலை ஏற்படும் பட்சத்தில் அதிகளவான மழை வீழ்ச்சி ஏற்படுவதற்கான நிலைமை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(எ-10)

# எல்லை தாண்டி மீன்பிடித்த 29 மீனவர்களுக்கும் மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 17

இலங்கை கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி வந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 29 இந்திய மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் 28ஆம் திகதி நெடுந்தீவு கடலில் வைத்து கைது செய்யப்பட்ட 12 பாண்டிச்சேரி மீனவர்களின் வழக்கு விசாரணையும் கடந்த 9ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 17 பாண்டிச்சேரி மீனவர்களின் வழக்கு விசாரணையும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்டது

இந்த மீனவர்கள் மீது எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக வழக்குப் பதிந்து ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்

குறித்த வழக்கை விசாரித்த நீதிவான் நளினி சுபாஸ்கரன், எதிர்வரும் 29ஆம் திகதிவரை மீனவர்கள் 29 போரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 36 படகுகளுடன் 279 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(எ-05)

# இலங்கைக்கு கடத்த முயன்ற 1200 கிலோ மஞ்சள் பறிமுதல்

இராமநாதபுரம், ஒக். 17

இலங்கைக்கு கடத்துவதற்காக உச்சிப்புளி - சல்லித் தோப்பு கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 10 இலட்சம் ரூபாய் பெறுமதியிலான 1200 கிலோ கிராம் மஞ்சள் மூடைகளை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து இராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்துக்கு கொண்டு சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

இராமநாதபுரம் கடற்கரை இலங்கைக்கு மிக அருகே இருப்பதால் இந்திய - இலங்கை சர்வதேச கடல் எல்லை ஊடாக இலங்கைக்கு கஞ்சா, மஞ்சள், கடல் குதிரை, கடலட்டை உள்ளிட்ட பொருட்கள் அதிகளவு கடத்தப்பட்டு வருகின்றன.

சுங்கத்துறை அதிகாரிகள் கண்காணித்து கடத்தல் சம்பவங்களை தடுத்து நிறுத்தி பொருட்களை பறிமுதல் செய்வதுடன் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கைது செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டபோது சந்தேகத்துக்கு இடமாக கடற்கரையோரம் கிடந்த மூடைகளை சோதனை செய்ததில் அதில் இலங்கைக்கு கடத்துவதற்காக மஞ்சள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது.

இதையடுத்து 28 மூடைகளில் இருந்த சுமார் 1200 கிலோ எடை கொண்ட மஞ்சள்களை பறிமுதல் செய்த சுங்கத்துறையினர் இராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்துக்கு எடுத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

(எ-05)

# வாய்பேச முடியாத பெண் மீது பாலியல் பலாத்கார முயற்சி!

## சந்தேக நபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக். 17

வாய்பேச முடியாத இளம் பெண் ஒருவரை நள்ளிரவு வேளை வீடு புகுந்து பலாத்காரம் செய்ய முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாதம் 27 ஆம் திகதி நள்ளிரவு குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அல்லைப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய வாய்பேச முடியாத பெண் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த சந்தேக நபர் அவரை பலாத்காரம் செய்ய முயற்சித்துள்ளார்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிமன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

(எ)

# விகிதாசார முறையில் மாகாணசபை தேர்தல்

## அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 17

**மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமையில் அடுத்த வருடத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக கமத்தொழில் அமைச்சர் கே.டீ. லால்காந்த தெரிவித்துள்ளார்.**

மேலும், பாராளுமன்றத்தினூடாக பழைய விகிதாசார தேர்தல் முறைமையை நிறை வேற்றிக் கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொலனறுவை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபைத் தேர்தலை கடந்த அரசாங்கமே இடைநிறுத்தியது. பொதுவாக புதிய தேர்தலை முறைமையை கொண்டுவந்துள்ள நிலையில், தேர்தலை நடத்தும் முறையை ஏற்பாடு செய்ததன் பின்னரே பழைய முறைமையில் தேர்தலை நடத்த வேண்டும். புதிய தேர்தல் முறைமையை முறையாக மேற்கொள்ளாமல் ஏற்கனவே இருந்த தேர்தல் முறைமையை நிறுத்திவிட்டார்கள். அதன் பின்னர் தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இருந்தபோதும் புதிய தேர்தல் முறைமையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியவில்லை என்றால், அடுத்த வருடத்தில் பழைய தேர்தல் முறைமையிலாவது தேர்தலை நடத்துவோம். அவர்கள் செய்த தவறை திருத்திக் கொண்டு பழைய தேர்தல் முறைமையை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொண்டு பழைய விகிதாசார முறைமையிலாவது மாகாண சபைத் தேர்தலை நடத்தும் திட்டத்தின் அடிப்படையிலேயே செயற்பட்டு கொண்டிருக்கிறோம்-என்றார். (அ)



# பலகட்சி முறையை பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சிகள் ஒன்றுபடவேண்டும்!

## ஐ.தே.க. பகிரங்க அழைப்பு

கொழும்பு, ஒக். 17

இலங்கையின் ஜனநாயகப் பல கட்சி முறைமையைப் பாதுகாப்பதற்காக அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒரே மேடைக்குக் கொண்டு வருவதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும் என அக்கட்சி அறிவித்துள்ளது.

விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஐக்கிய தேசிய கட்சி இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

பல கட்சி முறைமையைப் பாதுகாக்கும்போது அரசியல் கட்சிகளின் தனித்துவம் மற்றும் கொள்கைகளை பாதுகாக்கும் வகையில் செயற்படுவது முக்கியமாகும். இந்த நிலைப்பாட்டுக்கு வருமாறு அனைத்துக் கட்சிகளையும் நாம் கோருகிறோம்.

அதேபோன்று, மேற்குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் உள்ள இடைவெளியை குறைத்து, ஒற்றுமையுடன் செயற்படுவதற்காகவும் நாம் உறுதிபூண்டுள்ளோம்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் நாம் கலந்து கொள்வோம். ஏனைய அரசியல் கட்சிகளுடனும் ஐக்கிய தேசிய கட்சி பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டியுள்ளது.

மேலும், எமது இரண்டு கட்சிகளுக்கிடையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஒரு குழுவை நியமிக்கும் யோசனைக்கும் நாம் இணக்கம் தெரிவிக்கின்றோம்.

ஐக்கிய மக்கள் சக்தி அண்மையில் வெளியிட்ட அறிக்கைகளையும், ஐக்கிய தேசியக் கட்சியின் அடிப்படைக் குறிக்கோளையும் கவனத்தில் கொண்டு எதிர்கால வேலைத்திட்டங்களை வகுக்கலாம்-என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# போதைப்பொருள் ஒழிப்பு தேசிய திட்டம் இந்த மாத இறுதிக்குள் தொடங்கப்படும்!

## அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அறிவிப்பு

கொழும்பு, ஒக். 17

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான தேசிய திட்டம் இந்த மாத இறுதிக்குள் தொடங்கப்படும் என அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதன்படி, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ், யாரும் போதைப்பொருட்களை இறக்குமதி செய்யவோ அல்லது விநியோகிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கம்பஹா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் "அழகான வாழ்க்கை, போதைப்பொருள் இல்லாத தேசம்" என்ற கருப்பொருளின் கீழ் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பேசிய அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த மாத இறுதிக்குள் போதைப்பொருள் இறக்குமதி மற்றும் விநியோகத்தை நிறுத்துவதற்கான ஒரு தேசிய திட்டம் தொடங்கப்படும். இதற்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை வெற்றிகரமாக, மறுவாழ்வு பணியகம், தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை, சமூக சேவைகள் துறை மற்றும் பிற நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளின் ஆதரவு தேவையாகவுள்ளது.

போதைப்பொருள் விநியோகத்தை நிறுத்துவதே எங்கள் முதன்மை நோக்கமாகும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ், யாரும் போதைப்பொருளை இறக்குமதி செய்யவோ அல்லது விநியோகிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

போதைப்பொருள் கடத்தல் மூலம் பாதாள உலகம் பெருமளவில் பரவியுள்ளது. போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதற்கான முயற்சிகள் தற்போது உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன-என்றார்.

# புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் மூவர் கைது!

கொழும்பு, ஒக். 17

தமன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத தொல்பொருள் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக மூவர் கைது செய்யப்பட்டனர்.

தமன பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் தமன, திவியகல பகுதியில் இந்த சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது, தனியார் நிலத்தில் தொல்பொருட்களை தேடும் நோக்கில் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 55, 42 மற்றும் 65 வயதுகளையுடைய திவியகல மற்றும் மொரகஹபள்ளம பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று சந்தேக நபர்களிடமும் பொலிஸார் தற்போது மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அதிக விலைக்கு குடிதண்ணீர் போத்தல் 25 மில்லியன் ரூபாவுக்கு மேல் அபராதம்!

கொழும்பு,ஒக். 17

அதிக விலைக்கு குடிதண்ணீர் போத்தல்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில் 25 மில்லியன் ரூபாவுக்கு மேல் அதிகமான அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 01 முதல் செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரையிலான ஆறு மாத காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் இருந்து இந்த அபராதங்கள் விதிக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

அந்தக் காலகட்டத்தில், நாடு முழுவதும் 306 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றில் பெரும்பாலானவை கொழும்பு மாவட்டத்தை மையமாகக் கொண்டிருந்தன. இந்த சோதனைகள் எதிர்காலத்தில் தொடரும் என்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (அ)

# சீரற்ற காலநிலையினால் 112 குடும்பங்கள் பாதிப்பு!

கொழும்பு, ஒக். 16

நாடு முழுவதும் தொடரும் சீரற்ற வானிலை காரணமாக நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, களுத்துறை, காலி, கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் 112 குடும்பங்களைச் சேர்ந்த 369 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்தம் காரணமாக ஒருவர் உயிரிழந்து உள்ளதுடன், 17 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இதேவேளை, மேல், சப்ரகமுவ, மத்திய, தென், ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீ கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மாகாண தேர்தலில் அரசு மண் கவ்வும்!

## உதய கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, ஒக். 17

தமது கோரிக்கைகளை நிறைவேற்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், மாகாணசபைத் தேர்தல் ஊடாக பலவீனமடைவதை இந்தியா விரும்பாது. எனவே, மாகாணசபைத் தேர்தல் விடயத்தில் இந்தியாவின் அழுத்தங்கள் இல்லை என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபைத் தேர்தலை ஒப்பிட்டால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு வடமத்திய மாகாணசபையை மட்டுமே கைப்பற்றக்கூடியதாக இருக்கும். ஆனால் தற்போது அந்த நிலைமையும் மாறியுள்ளது. ஆளுங்கட்சியால் ஒரு சபையைக் கூட கைப்பற்ற முடியாமல்போகும்.

மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்த அரசாங்கம் இல்லை. எனினும், சர்வதேச அழுத்தங்களுக்கு அஞ்சுகின்றது.



இப்பிரச்சினையின்போது இந்திய அழுத்தம் இல்லை. இந்தியா கூறுவதற்கிணங்க இந்த அரசாங்கம் செயற்படுகின்றது. எனவே, மாகாணசபைத் தேர்தல் ஊடாக அரசாங்கம் பலவீனமடையதை இந்தியா விரும்பாது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் -என்றார். (அ)

# வேலைவாய்ப்புக்களுக்காக இதுவரை 2,927 இலங்கையர் தென்கொரியாவுக்கு

கொழும்பு, ஒக். 17

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் தென் கொரியாவிற்கு வேலைவாய்ப்புக்காக 2,927 இலங்கையர்கள் சென்றுள்ளதாக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது. இவர்களில் 100 இளம் பெண்களும் அடங்குவதாக குறித்த பணியகம் தெரிவித்துள்ளது.

இதில் 2,197 பேர் உற்பத்தித் துறையிலும், 680 பேர் கடற்றொழில் துறையிலும், 23 பேர் கட்டுமானத் துறையிலும், இருவர் விவசாயத் துறையிலும் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

இதற்கிடையில், தென் கொரியாவில் ஏற்கனவே வேலைவாய்ப்பை பெற்றுள்ள மேலும் 200 இற்கு மேற்பட்ட இலங்கையர்களை இந்த மாத இறுதிக்குள் அனுப்புவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் 2025 ஆம் ஆண்டுக்கான கொரிய மொழி பரீட்சைக்கு 36,475 விண்ணப்பதாரர்கள் பதிவு செய்துள்ளனர். குறித்த பரீட்சை ஒக்ரோபர் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (அ)

# மாகாண சபை தேர்தலை நடத்துங்கள் எந்தவொரு பலப்பரீட்சைக்கும் தயார்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ

கண்டி, ஒக். 17

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் பயணத்தால், எந்தவொரு தேர்தலுக்கும் முகம் கொடுக்க நாம் தயாராக இருக்கிறோம். அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்த தீர்மானித்தால், அதற்கான திகதியை உடனடியாக அறிவிக்க வேண்டும். எந்தவொரு கருத்துக் கணிப்புக்கும் எந்தவொரு பலப்பரீட்சைக்கும் முகங்கொடுக்க நாம் தயாராக இருக்கிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கண்டி, அஸ்கிரிய மகா விகாரைக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை சென்ற சஜித் பிரேமதாஸ, அஸ்கிரிய மகா விகாரையின் அனுநாயக தேரர் நாரம்பனாவே ஆனந்த தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டை வங்குரோத்தடையச் செய்தோருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்திதான் உயர் நீதிமன்றத்துக்குச் சென்றது. இதன் மூலமே குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டார்கள். மின்சாரக் கட்டண அதிகரிப்பை அரசாங்கம் கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்து கொடுத்த அழுத்தமே காரணம்.

போதைப்பொருள் வர்த்தகத்தை இல்லாதொழிப்பது நல்ல விடயமாகும். இந்தப் பணியை யார் செய்தாலும், அதனால் நாட்டுக்கு நல்லது நடப்பதாக இருந்தால் ஆதரவளிப்போம். இதேவேளை, பாடசாலைக் கட்டமைப்பில் போதைப்பொருட்கள் பரவுவதை தடுத்து நிறுத்துவது மிகவும் அவசியம் என்றும் அவர் கூறினார். (எ)

# தாய் மற்றும் மகள்மீது ஓட்டோ மோதி விபத்து

மட்டக்களப்பு, ஒக். 17

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் களுதாவளை பிரதேசத்தில் பாடசாலையொன்றுக்கு முன்னால் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவி உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

பாடசாலை நிறைவடைந்ததும் தனது மகளை அழைத்துக்கொண்டு வீதி எதிரே உள்ள பாதசாரிக் கடவையால் வீதியைக் கடந்து சென்றவேளை திடீரென வந்த ஓட்டோ, தாய் மற்றும் மகள் மீது மோதிவிட்டு அருகிலிருந்த மரக்கறிக் கடையின் மீதும் மோதியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் தாயும் மகளும் படுகாயங்களுக்குட்பட்ட நிலையில் அவர்கள் இருவரும் களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் ஓட்டோ சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ)

# மின்னல் தாக்கியதில் ஒருவர் மருத்துவமனையில் அனுமதி

## வீடும் வானும் பலத்த சேதம்

நோர்வூட், ஒக். 17

நோர்வூட் பகுதியில் நேற்று முன்தினம் மாலை மின்னல் தாக்கியதில் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நோர்வூட் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த வான் மற்றும் அருகிலுள்ள வீடு மீது மின்னல் தாக்கியதில் பலத்த சேதம் ஏற்பட்டது. அத்துடன் மின்னல் தாக்கியதில் ஏற்பட்ட அதிர்ச்சியில் வீட்டில் இருந்த ஒருவர் தரையில் மயங்கி விழுந்து காயமடைந்து டிக்கோயா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புதன்கிழமை மாலை 05:00 மணியளவில் வான் நிறுத்துமிடத்துக்கு அருகிலுள்ள ஒரு பெரிய மரத்தில் மின்னல் தாக்கியதாகவும், பின்னர் வான் மற்றும் வீடு மீது மின்னல் தாக்கியதாகவும் தெரியவருகிறது.

தொடர்ந்து மழையுடன் இடி மின்னல் தாக்கியதால் நோர்வூட் பகுதியில் திடீர் மின் தடை ஏற்பட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல்நிலையால் நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. (எ)

# வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்த பல திட்டங்கள்

கொழும்பு, ஒக். 17

எதிர்வரும் சுற்றுலாப் பருவத்தை இலக்காகக் கொண்டு சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்த அரசாங்கம் பல திட்டங்களைத் தீட்டியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்குத் தேவையான அவசர முடிவுகளை எடுப்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவால் நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி செயலணி நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இரண்டாவது முறையாகக் கூடிய போது இந்த விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதன்படி, சுற்றுலாப் பயணிகளுக்கு விசாக்கள் மற்றும் மின்னணு பயண அனுமதிப் பத்திரங்களை வழங்குவதை எளிதாக்குவது தொடர்பான விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வரும்போது விமான நிலையத்தில் ஏற்படும் நெரிசலைக் குறைப்பதற்கான சேவை மையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றும் பல்வேறு இடங்களைப் பார்வையிடச் செல்லும் போது சுற்றுலாப் பயணிகள் பற்றுச்சீட்டுக்களை வாங்க வேண்டிய இடங்களில் ஒன்லைனில் பற்றுச்சீட்டுக்களை வாங்குவதை எளிதாக்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

சுற்றுலாப் பயணிகள் மற்றும் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடையவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. (எ)

# கசிப்பு, போதைப்பொருளுடன் பெண் உட்பட 11 பேர் கைது

மட்டக்களப்பு, ஒக். 17

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது 5 லீற்றர் கசிப்பு மற்றும் போதைப்பொருளுடன் பெண் உட்பட 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரையின் கீழ் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி, தாழங்குடா, புதுக்குடியிருப்பு, நாவற்குடா, கல்லடி, கிரான்குளம் உட்பட பல இடங்களில் இத் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது கசிப்பு விற்பனை செய்யும் இடங்கள், கசிப்பு உற்பத்தி நிலையங்கள் என்பன பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டன. இந்த நிலையில், கைது செய்யப்பட்ட 11 பேரையும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# யானைகளை விரட்டும் நடவடிக்கை முன்னெடுப்பு

நாவிதன்வெளி, ஒக். 17

காட்டு யானைகளை விரட்டும் வேலைத்திட்டத்தை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சொறிக்கல்முனை பகுதியை அண்டிய நாணல் காட்டுப்பகுதியில் நிலை கொண்டு அருகில் உள்ள கிராமங்களை அச்சுறுத்தி வந்த சுமார் 40 யானைகளை காட்டுக்குள் விரட்டும் நடவடிக்கை நேற்று முன்தினம் மாலை முன்னெடுக்கப்பட்டது.

இப்பகுதிகளில் உள்ள பொது மக்கள் குடியிருப்பை அண்மித்த வயல் பகுதிகளில் கடந்த சில நாட்களாக காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதுடன் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய காட்டு யானைகளை சம்மாந்துறை, அம்பாறை வன பிரதேசத்தை நோக்கி விரட்டினர். (எ-01)

# புதையல் தோண்டிய நால்வர் கைது

கல்முனை, ஒக். 17

புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டம் இங்கினியாகல பொலிஸ் பிரிவில் உள்ள கொன்னஹார கிராமத்தில் புதையல் தோண்டிக் கொண்டிருப்பதாக அம்பாறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது புதையல் தோண்டிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

அத்துடன் தண்ணீர் மோட்டார், மின்சாரம் சேகரிக்கப் பயன்படுத்தப்படும் கம்பி, சங்கிலிகள் மற்றும் பல பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்த தோண்டும் பணி பல நாட்களாக நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக இங்கினியாகல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ)

# கடும் மின்னல் தாக்கம் குறித்து மக்களே அவதானமாக இருங்கள்

கொழும்பு, ஒக். 17

நாட்டின் பல பகுதிகளுக்கு கடும் மின்னல் தாக்கம் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களுக்கும் மாத்தறை, அம்பாந்தோட்டை, குருநாகல், அம்பாறை, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கும் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் கடும் மின்னல், இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும். மின்னல் தாக்கத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொதுமக்கள் பின்வரும் அறிவுரைகளைப் பின்பற்றுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் ஆலோசனை வழங்கியுள்ளது.

- திறந்தவெளிகளில் நடமாடுவதை குறைத்துக் கொள்ளவும். மரங்களின் கீழ் ஒருபோதும் நிற்க வேண்டாம்.
- இடி முழக்கத்தின் போது நெல்வயல்கள், தேயிலைத் தோட்டங்கள், திறந்த நீர்நிலைகள் போன்றவற்றைத் தவிர்த்துக் கொள்ளவும்.
- இடி முழக்கத்தின் போது கம்பித்தொடர்புள்ள தொலைபேசி மற்றும் மின்னிணைப்பிலுள்ள மின் உபகரணங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.
- துவிச்சக்கர வண்டிகள், உழவியந்திரங்கள், படகுகள் போன்ற திறந்த வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.
- விழக்கூடிய மற்றும் விழுந்த மரங்கள், மின்கம்பிகள் குறித்து அவதானமாக இருக்கவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# காட்டு யானை தாக்கியதில் விவசாயி பலி

மட்டக்களப்பு, ஒக்.17

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள ஏரளக்குளம் பகுதியில் உள்ள வயலுக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த விவசாயி மீது காட்டு யானை தாக்கியதில் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

ஏரளக்குளம் கருங்கன்மடு பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய வைரமுத்து நல்லரெத்தினம் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். (எ)

## இலங்கைக்கு...

பிரதமராக பதவியேற்ற பின்னர் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதல் உத்தியோகபூர்வ விஜயம் இதுவாகும். கல்வி அமைச்சராகவும் இருக்கும் அவர், தனது இந்திய விஜயத்தின் போது, இந்திய தொழில்நுட்பக் கழகம் (டில்லி), மற்றும் நிதியூயோக் ஆகியவற்றிற்கு விஜயம் செய்து, கல்வி, புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் ஒத்துழைப்புக்கான வழிகளை ஆராய்வதுடன் கல்வி மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து கலந்தாலோசிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## ஊர்காவற்றுறை...

உயிரிழந்துள்ளார்.

வியாபாரியின் சடலம், யாழ் . போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் ஊர்காவற்துறை பொலிஸார் விபத்து தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-5)

## செவ்வந்தியை...

இந்தநிலையில் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்குத் தடுப்புக்காவல் உத்தரவுகள் பெறப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தமிழக...

வேண்டியுள்ளது. தமிழக சட்டசபைத் தேர்தலானது மார்ச் இறுதியில் அல்லது ஏப்ரல் முதல் வாரத்தில் நடக்கவுள்ளது. அதற்கு முன்னதாக இலங்கையில் தேர்தல் நடத்தப்படக்கூடும் என்றே அரசியல் கள நிலைவரம் தெரிவிக்கின்றது.

எனினும், தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசாங்கம் அஞ்சுகின்றது. ஏனெனில் உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் அதன் வாக்கு வங்கி சரிந்துள்ளது. எது எப்படி இருந்தாலும் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் ஆணை யாருக்கு என்பது தெரியவரும்- என்றார். (அ)

## கச்சதீவை...

படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்

இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து நடைபெறும் தாக்குதல்கள் துன்புறுத்தல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாக தமிழக மீனவ சமூகங்கள் தொடர்ந்து துன்பங்களை எதிர்கொள்கின்றனர்.

2021 முதல், 106 வெவ்வேறு சம்பவங்களில் 1482 மீனவர்களும் 198 மீன்பிடிப் படகுகளும் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் மீனவர்கள் பெரும் துயரத்தையும் பொருளாதார இழப்பையும் எதிர்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்கள் பாரம்பரியமாக இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த கச்சதீவைச் சுற்றியுள்ள கடல் பகுதியில் மீன்பிடித்து வருகின்றனர்.

இந்தத் தீவு ஒன்றிய அரசால் மாநில அரசின் முறையான ஒப்புதலைப் பெறாமல் இலங்கைக்கு மாற்றப்பட்டது. இந்த முடிவை 1974 முதல் தமிழ்நாடு சட்டமன்றம் தொடர்ந்து எதிர்த்து வருகிறது.

இதன் விளைவாக, நமது மீனவர்கள் இப்போது தங்கள் பாரம்பரிய மீன்பிடித் தளங்களுக்குள் செல்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன், அத்துமீறி நுழைவதாகக் கூறி அடிக்கடி துன்புறுத்தப்படுகின்றனர்.

இந்த நிலையில் கச்சதீவை மீட்பதற்கு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பிரதமரிடம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். (அ)

## போர்க்...

கண்காணிப்பாளர்களை இணைத்துக் கொள்ளலாம் எனவும் அவர் கூறினார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பொன்சேகா,

“சாட்சி இருந்தால், முறைப்பாடு கிடைக்கப்பெற்றால், இடம், சம்பவம், திகதி என்பன தெரிந்திருந்தால் நிச்சயம் விசாரணை நடத்தப்பட வேண்டும். ஆனால் போலி தகவல்களை கருத்திக் கொள்ள வேண்டியதில்லை. 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்றெல்லாம் தமிழ் அரசியல்வாதிகளால் போலி கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. ஒட்டு மொத்த இராணுவமும் தவறிழைத்தது என சிலர் துள்ளிக் குதிக்கின்றனர். இப்படியான கருத்துகள் பற்றி விசாரிக்க முடியாது அல்லவா? விசாரணை நடத்துவதாக இருந்தால் ஏதேனும் மூலம் அவசியம்.” - எனவும் குறிப்பிட்டார்.

‘விசாரணை நடத்தப்பட்டாலும் அது தேசிய விசாரணையாகவே இருக்க வேண்டும். எனினும், வெளிநாட்டில் இருந்தும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதால் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை வைத்திருப்பது நல்லது. அப்போது வெளிப்படைத்தன்மை இருக்கும். ” - எனவும் பொன்சேகா மேலும் குறிப்பிட்டார். (அ)

## சிறுவர்...

உளைச்சல் மற்றும் தற்கொலை வரை இட்டுச் செல்கின்றன என்று ஆணைக் குழு எச்சரித்துள்ளது.

சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கட்டளைச் சட்டம், தண்டனைச் சட்டம் மற்றும் அரசியலமைப்பின் 11 ஆவது உறுப்புரை (சித்திரவதை அல்லது கொடூரமான, மனிதாபிமான மற்ற அல்லது இழிவுபடுத்தும் நடத்து தலில் இருந்து விடுதலைக்கான உத்தர வாதம்) ஆகியவை சிறுவர்களுக்கான வலுவான பாதுகாப்பை வழங்குகின்றன.

வீடுகள், பாடசாலைகள், பராமரிப்பு நிலையங்கள் அல்லது நீதி நிறுவனங்கள் என எங்கு வழங்கப்பட்டாலும், உடல் ரீதியான தண்டனையானது இந்தச் சட்டப் பாதுகாப்புகளை மீறுவதாகும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உடல் ரீதியான தண்டனையை அனைத்து நிலைகளிலும் ஒழிக்க மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள், சிறுவர்கள் மீதான மரியாதையின் அடிப்படையிலும், அவர்களின் கண்ணியம் மற்றும் நம்பிக்கையை வளர்க்கும் நேர்மறையான அணுகுமுறையின் அடிப்படை யிலும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

பயம் அல்லது வன்முறையின் அடிப்படையில் ஒழுக்கம் இருக்கக்கூடாது என்றும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் குறித்து மக்கள் விழிப்புணர்வுடன் விவாதிக்க வேண்டும் என்றும், சிறுவர் பாதுகாப்பைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தக் கூடிய தவறான தகவல் அல்லது எதிர்மறையான பிரசாரங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

சிறுவர்களின் சிறந்த நலன் என்ற கொள்கைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், 18 வயதுக்குட்பட்டவர்கள் மீதான உடல் ரீதியான மற்றும் உடல் ரீதியல்லாத அனைத்து வகையான கொடூரமான, இழிவுபடுத்தும் மற்றும் தீங்கு விளைவிக்கும் தண்டனைகளையும் தடை செய்யக் கோரும் தண்டனைச் சட்டமூலத்தை (திருத்தம்) அரசாங்கம் 2025 ஜூலை 4 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிட்டது.

உடல் ரீதியான தண்டனையை முடிவுக்குக் கொண்டுவரவும், நேர்மறையான, உரிமை அடிப்படையிலான சிறுவர் மேம்பாட்டு அணுகுமுறைகளை ஊக்குவிக்கவும் குடும்பங்கள், கல்வியியலாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூகமும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு அழைப்பு விடுத்துள்ளது. (அ)

# ரயிலில் இருந்து இறங்க முற்பட்ட பெண் தவறிவிழுந்து மரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

சாவகச்சேரிப் பகுதியில் ரயிலில் இருந்து இறங்க முற்பட்ட குடும்பப் பெண் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்

நேற்று கொழும்பில் இருந்து யாழ் நோக்கி வந்த புகையிரதம் சாவகச்சேரி - சங்கத்தானையை அடைந்ததும் மேற்படி பெண் புகையிரதத்தில் இருந்து இறங்க முற்பட்டுள்ளார்.

இருப்பினும் அவர் இருந்த பெட்டியின் வாயில் ஊடாக இறங்குவதற்கு இறங்கு தளம் இல்லாத காரணத்தால் வேறு பெட்டி ஊடாக சென்று இறங்க முற்பட்ட வேளையில் புகையிரதமும் நகர்ந்ததால் பெண் கீழே விழுந்து படுகாயமடைந்திருந்தார்.

படுகாயமடைந்த பெண்ணை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்திருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பல்கலைக்கழகம் ஒன்றில் கற்கும் மகனிடம் சென்று மீண்டும் வீடு திரும்பிய போதே இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சாவகச்சேரி கோவிற்குடியிருப்பைச் சேர்ந்த 53வயதான சு.சுபாசினி என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

மேற்படி விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-5)

## சர்வதேச...

இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் விசாரணை நடைபெற்றால் இனப்படுகொலை நிரூபிக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கின்ற போது அதனைக் குழப்பும் விதமாக அரசுடன் இணைந்து செயற்படும் விதமாக சரத் பொன்சேகாவின் கருத்துக்களும் இருந்து வருகின்றன.

இறுதி யுத்தத்தின் போது இராணுவம் தொடர்ச்சியாக மக்களை அழிக்கின்ற நடவடிக்கைகளின்போது கடும் ஆட்லறி தாக்குதல்களை மக்கள் மீது பயன்படுத்தி வந்த சுழலில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்குக் கண்காணிக்கப்பட்ட ஒரு பொறிமுறையை ஏற்படுத்துவதற்கு என்னுடன் தொடர்புகளை மேற்கொண்டார்கள்.

அவ்வகையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துகின்ற முயற்சிகளை மேற்கொண்டேன். குறிப்பாக 2009ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி பிற்பகல் முதல் இரவு 8 மணி வரை இருபக்கத் தொடர்புகளை மேற்கொண்டு இணக்கப்பாடு எற்படுத்தப்பட்டது.

குறிப்பாக இரண்டு ஆயர்களான இராயப்பு யோசப் ஆண்டகை மற்றும் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையுடன் அரசு நேரடியாகத் தொடர்பு கொண்டு அரச தரப்பில் பஸில் ராஜ பக்ஷவும் நானும் வன்னி கட்டுப்பாட் டுக்குச் சென்று அங்கு தமிழீழ விடு தலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் நடேசன் வெளியில் வந்து மக்களைப் பாதுகாப்பாக வெளியில் கொண்டு வருவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

ஆனால், பேச்சு வெற்றிகரமாக முடிவடைந்தபோதும் இராணுவம் ஆட்லறி தாக்குதலைத் தொடர்ச்சியாக மேற்கொண்ட நிலையில் எதற்காக இதனைச் செய்கிறீர்கள் என்ற போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டில் இல்லை, அவர் நாடு திரும்பிய பின்னர் தேசிய பாதுகாப்பு கூட்டத்தில் கலந்துரையாடியே முடிவு எடுக்கப்படும் எனக் கூறப்பட்டது. எனினும், அந்தக் கூட்டத்தில் முடிவுகளை எடுக்கப்படாது தொடர்ச்சியாக மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வந்தது. இதனை ஏன் தொடர்ந்தும் இதனை செய்கிறீர்கள் எனக் கேட்டபோது தேசிய பாதுகாப்புக் கூட்டம் கூடும் வரை தாக்குதலை நிறுத்த முடியாது எனக் கூறப்பட்டது.

மேலும் வெள்ளைக்கொடியுடன் தான் வர முடியும் எனக் கூறப்பட்டது. இது சாத்தியப்பாடு இல்லாத விடயம் என்பதால் எனது இணக்கப்பாட்டை நான் முடிவுறுத்திக் கொண்டேன்.

காரணம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அமைப்பின் மூலம் மக்களைப் பாதுகாப்பாகக் கொண்டு வருவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சரிவராத நிலையில்தான் என்னுடனான தொடர்பு மேற்கொள்ளப்பட்டது.

வெள்ளைக்கொடி விவகாரம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. காரணம் பேச்சு வார்த்தைகள் மூலம் இணக்கம் காணப்பட்ட போதும் தொடர்ச்சியான ஆட்லறி தாக்குதல் மேற்கொள்ளப்படுவது மக்களை இல்லாது ஒழிப்பதற்கான சூழலைத்தான் அரசு செய்தது என்பதே நான் கூறும் விடயம். இது இனப்படுகொலையின் விவகாரமாகும்.

ஆனால், சரத் பொன்சேகா தற்போது கூறி வரும் வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பில் நான் கூற முடியாது. வெள்ளைக்கொடியுடன் வந்தவர்களைக் கொலை செய்தார்கள் என்பது கடந்த காலங்களில் வெளிவந்த உண்மைகள் என்பது அனைவருக்கும் புரிந்த விடயம் ஆகும்.

சரத் பொன்சேகா தற்போது கூறும் விடயம், வெள்ளைக்கொடி தொடர்பாகத் தான் சாட்சி வழங்கத் தயார் என்பதே. உள்ளக விசாரணைக்குள் வெள்ளைக் கொடி விவகாரம் முடக்கப் படுவதற்கான அத்திவாரம் போடுகின்ற கருத்தாகவே இதனை நான் பார்க்கின்றேன்.

சரத் பொன்சேகாவும் சர்வதேச குற்றவியல் விசாரணைதான் நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும் - என்றார். (அ)

## கடன்...

மற்றும் நிதிச்சந்தைகள் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஜேஸன் வு தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள உலகளாவிய நிதியியல் ஸ்திரத்தன்மை தொடர்பான அறிக்கையை வொஷிங்டனில் வெளியிட்டுவைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்திட்டத்தின் கீழ் இலங்கையின் செயற்பாடுகள் குறித்துத் திருப்தியடைவதாகவும், இருப்பினும் இந்த சாதகமான சூழ்நிலையானது “முழுநிறைவு“ எனும் எண்ணப்பாட்டுக்கு வழிவகுத்துவிடக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை இலங்கை போன்ற எல்லை நாடுகளின் பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில், அவை தமது நடைமுறைக்கணக்கு மற்றும் நிதிக்காப்பு ஆகிய அடிப்படைகளை தொடர்ச்சியாக வலுப்படுத்தவேண்டும் என்றும், அதனூடாகவே வெளியக அழுத்தங்களினால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறைவடையும் என்றும் ஜேஸன் வு சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று இலங்கையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் கடன்மறுசீரமைப்பு செயன்முறையில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் எட்டப்பட்டிருப்பதாகவும், நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் பயணிப்பதுடன் முதலீட்டாளர்களின் நம்பிக்கை மீளுறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## இருள்...

கலந்துகொண்டார்.

இதன்போது, குறித்த கல்லூரியில் தாம் கல்வி கற்ற காலத்தை நினைவூட்டிய பிரதமர், தம்மை மீண்டும் அங்கு வரவழைத்தமை தொடர்பில் நன்றிகளையும் தெரிவித்துள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu

# இந்திய அகதி முகாமில் இருந்து மீள தாயகம் திரும்பிய குடும்பம்!

மன்னார், ஒக். 17

இந்தியாவின் தமிழகத்தில் அகதிகளாக தங்கியிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மீண்டும் கடல் வழியாக மன்னாருக்கு திரும்பியுள்ளனர்.

இவ்வாறு நாடு திரும்பிய அவர்கள் பேசாலை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மன்னாரை சேர்ந்த இவர்கள், இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக கடல் வழியாக படகில் சென்று தமிழகத்தில் அடைக்கலம் கோரிய நிலையில் நீண்ட நாட்களாக முகாமில் வசித்து வந்துள்ளனர் என தெரியவருகிறது.

இலங்கையில் போர் நிறைவடைந்த நிலையில் இயல்பு வாழ்வு திரும்புவதான செய்தியில் அடிப்படையில் கடந்த 14 ஆம் திகதி இரவு தமிழ் நாட்டில் இருந்து படகில் புறப்பட்டு மன்னார் பேசாலை கடற்பரப்பை வந்தடைந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தாமாகவே பேசாலை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த நால்வரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# பாதாளக் குழுக்களுக்கு பின்னால் உள்ளவர் யார்?

## விசாரணை வேண்டும் என்கிறார் நாமல்

கொழும்பு, ஒக். 17

பாதாளக் குழுக்களுக்கு பின்னால் இருப்பது யார், அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது யார் என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை அவசியம் என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இஷாரா செவ்வந்தி கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே நாமல் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

செவ்வந்தி நேபாளத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இது நல்லது.

இந்த திட்டமிட்ட குற்றவாளிகளுக்கு பின்னால் இருப்பது யார், அவர்களுக்கு எவ்வாறு ஒத்துழைப்பு கிடைக்கின்றது என்பது உட்பட அனைத்து தகவல்களையும் நாட்டு மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும். எனவே, பக்கச்சார்பற்ற விசாரணை அவசியம். முன்னாள் கடற்படைத் தளபதிக்கு நடந்ததுபோல விசாரணை இடம்பெறக்கூடாது-என்றார். (அ)

## கடவுச்சீட்டு குறியீடு

# உலக தரவரிசையில் இலங்கை தடுமாற்றம்

கொழும்பு, ஒக். 17

2025 ஆம் ஆண்டுக்கான ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டில் இலங்கை கடவுச்சீட்டு சரிவை சந்தித்துள்ளது.

இலங்கை கடவுச்சீட்டு, கடந்த ஆண்டை விட 6 இடங்கள் பின்தங்கி 98 ஆவது இடத்துக்குச் சென்றுள்ளது.

ஆண்டின் தொடக்கத்தில், பல்வேறு காரணிகளால் இலங்கை கடவுச்சீட்டு பின்தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் மதிப்பாய்வுகள் 2027 இல் நிறைவடையும்

## மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க

கொழும்பு, ஒக். 16

**சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடனுடன் தொடர்புடைய சகல மதிப்பாய்வு நடவடிக்கைகளையும் 2027ஆம் ஆண்டின் நடுப்பகுதியாகும்போது நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**



சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள மத்திய வங்கி ஆளுநர் வழங்கிய விசேட செவ்வியின்போது இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வொஷிங்டன் நகரில் இடம்பெறும் இந்த கூட்டத்தொடரில் உலகிலுள்ள நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. அதனால் இந்த கூட்டதொடர் இலங்கைக்கு மிக முக்கியமானதாக அமைந்துள்ளது. அதேபோன்று இருதரப்பு மற்றும் பலதரப்பு என்ற அடிப்படையில் ஏனைய பிரதிநிதிகள் மற்றும் முதலீட்டாளர்களை சந்திக்கவும் வாய்ப்புக் கிடைக்கிறது.

கடந்த வருடம் இலங்கை ஐந்தாவது கடன் மீளாய்வு முழுமை செய்திருந்தது. இந்த மதிப்பாய்வு எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் பணிப்பாளர் சபையில் முன்வைக்கப்படும். அதன்போது முக்கியமான பல்வேறு விடயங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

அதில் ஒன்று, 2026 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளவேண்டியது அவசியமாகும். அதற்கு மேதிகமாக மேலும் முக்கியமான மறுசீரமைப்புகளை செய்ய வேண்டியுள்ளது. அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்வது போன்ற விடயங்கள் அதில் உள்ளடங்குகின்றன. செலவுகளை ஈடுசெய்யக்கூடிய வேலைத் திட்டம், செலவை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் எளிமையான வேலைத் திட்டம், செலவு அடிப்படையிலான நிதி நிலைப்படுத்தல் உள்ளிட்ட மேலும் இரு விடயங்களை செய்யவேண்டியுள்ளது.

பொருளாதார மந்த நிலையினால் அதிகம் பாதிக்கப்பட்ட வறுமை கோட்டிலுள்ள மக்களுக்கு இந்த வேலைத்திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்குவது இலங்கை மக்களுக்கு மிகவும் அவசியமான விடயமாகவுள்ளது. அடுத்த, ஊழல் மற்றும் அரச பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கப்படவேண்டும்.

இந்த பயணத்தின் ஒரு பகுதியாக ஐந்தாவது மீளாய்வு அமையும். 08 மீளாய்வுகளை முழுமை செய்யவேண்டியுள்ளது. 2027 ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் அதனை நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம்-என்றார்.

# இலங்கைக்கான பயண ஆலோசனை; எந்தவிதமான மாற்றங்களும் இல்லை

## அமெரிக்கத் தூதுவர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 16

அமெரிக்க வெளிவிவகாரத்துறை அண்மையில் வெளியிட்ட இலங்கைக்கான பயண ஆலோசனையில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதை அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உறுதிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்க குடிமக்கள் சர்வதேச பயணம் குறித்து தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவும் வகையில், அமெரிக்க வெளிவிவகாரத்துறை தொடர்ந்து பயண ஆலோசனை புதுப்பிப்புகளை வெளியிடுவதாகவும் இலங்கைக்கான தூதுவர் தனது சுட்டிக்காட்டினார்.

இது குறித்த எக்ஸ் பதிவில் அவர்,

2025 ஒக்ரோபர் 9 ஆம் திகதி இலங்கைக்கு வழங்கப்பட்ட பயண ஆலோசனை நிலை 2 இல் உள்ளது, ஆலோசனை மட்டத்தில் எந்த மாற்றமும் இல்லை - என்றார்.

அமெரிக்க வெளிவிவகாரத்துறை இலங்கைக்கான பயண ஆலோசனையை திருத்தியமைத்துள்ளதாக வெளியான பல அண்மைய தகவல்களை அடுத்து இந்த அறிவிப்பு வந்துள்ளது. (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியுடனான பேச்சுக்குமூவர் கொண்ட குழுவை நியமித்த ஐ.தே.க.

கொழும்பு, ஒக். 17

ஐக்கிய தேசியக் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியுடன் கலந்துரையாடுவதற்காக மூன்று பேர் கொண்ட குழுவை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் குழுவில் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, ஐ.தே.க. பொதுச் செயலாளர் தலதா அத்துக்கோரள மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ரோலண்ட் பெரேரா ஆகியோர் உள்ளனர். (அ)

# யோஷித-டெய்சி மீதான வழக்கில் முன்னேற்றம்!

கொழும்பு, ஒக். 17

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் யோஷிதவின் பாட்டியான டெய்சி பொரஸ்ட் ஆகியோருக்கு எதிரான முன் விளக்க மாநாட்டுக்குத் திகதி இடப்பட்டுள்ளது.

இதன்படி, நிதித் தூய்தாக்கல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு மீதான முன் விளக்க மாநாட்டை, எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி நடத்துவதற்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உதேஷ் ரணதுங்க முன்னிலையில், குறித்த வழக்கு நேற்று முன் தினம் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வழக்குடன் தொடர்புடைய ஆவணங்கள், பகிரங்க நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகளிடம் கையளிக்கப்பட்டன.

தமது சேவை பெறுநருக்கு எதிரான மேலும் சில ஆவணங்கள், கடுவல நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குடன் இணைக்கப்பட்டுள்ளதாக பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி மன்றில் அறிவித்தார்.

அவற்றை ஆராய்வதற்கான திகதி வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த ஆவணங்களைப் பரிசீலிப்பதற்கான திகதியையும், முன் விளக்க மாநாட்டுக்கான திகதியையும் அறிவிக்குமாறு பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மன்றில் கோரிக்கை விடுத்தார்.

இரு தரப்பு விடயங்களையும் ஆராய்ந்த மேல் நீதிமன்ற நீதிபதி, கடுவல நீதிமன்றத்தில் உள்ள ஆவணங்களைப் பரிசீலிப்பதற்காக இந்த வழக்கை எதிர்வரும் 06 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அத்துடன், வழக்கு மீதான முன் விளக்க மாநாட்டை நவம்பர் மாதம் 12 ஆம் திகதி நடத்துவதற்கும் திகதி அறிவித்தார். (அ)

# முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு எதிரான எழுத்தாணை மனு தள்ளுபடி

கொழும்பு, ஒக். 17

வடக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் சார்பில் வழக்கை தொடரமுடியாது போனமையால், வழக்கை தள்ளுபடி செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிவில் சமூக செயற்பாட்டாளர் நாகானந்த கொடித்துவக்கு மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் மலிந்த செனவிரத்ன ஆகியோர் இந்த எழுத்தாணை மனுவை கடந்த 2018 ஆம் ஆண்டு தாக்கல் செய்திருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீன் உள்ளிட்ட சிலர், வழக்கின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லா, இந்த வழக்கு தகுதியற்றது என்றும், சட்டபூர்வ காரணங்களை விட ஊடக விளம்பரத்துக்காகவே முதன்மையாக தொடரப்பட்டது என்றும் வாதிட்டார்.

மனுதாரர் தொடர்ந்தும் வழக்கை தொடர்ந்து முன்னெடுக்கத் தவறியதால், மனுவை தள்ளுபடி செய்யுமாறு அவர் நீதிமன்றத்தைக் கோரினார்.

இந்த நிலையில் குறித்த சமர்ப்பணத்துக்கு உடன்பட்டு, மேல்முறையீட்டு நீதிமன்றம் குறித்த எழுத்தாணை மனுவை தள்ளுபடி செய்தது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.